**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 131/2021**

**Deposition of Witness for : PW 11**

| | |
|---|---|
| **Name** | **:** டாக்டர் கமலகண்ணன் |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of12-04-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த துறையில் உதவி பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 9.3.2017 அன்று அதே பணியில் இருந்த போது மங்கலம் காவல் நிலைய குற்ற எண் 58/2017 தொடர்புடைய ரமேஷ் 35 வயது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய திருவண்ணாமலை கிராமிய காவல் வட்டம் காவல் ஆய்வாளர் அவர்களிடம் இருந்து விண்ணப்பம் பெறப்பட்டு தலைமை காவலர் 1088 திரு. கே. காமராஜ் என்பவரால் அங்க மச்ச அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டு அதே நாளில் பிற்பகல் 1.40 மணியளவில் பிரேத கூராய்வு தொடங்கப்பட்டது. பிரேத கூராய்வில் மிதமான ஊட்டத்துடன் அழுகிய நிலையில் உள்ள ஆண் பிரேதம் இருந்தது. வலது தொடை முன்புறம் இடது தொடயின் உட்புறம் மற்றும் இரண்டு கால் முட்டிகளின் உட்புறங்களில் இறந்ததற்கு பின் உண்டான தோல் உரிந்து காணப்பட்டது. மற்றும் எறும்பு கடித்தற்கான அடையாளங்கள் உடலில் பல்வேறு இடங்களில் காணப்பட்டது. இறப்பிற்கு முன் உண்டான காயங்கள்

1. ஒரு தெளிவான முழுவதுமாக கிடைமட்டமாக கருஞ்சிவப்பு நிறத்திலான கயிறு போன்ற பொருளினால் உண்டான சிராய்ப்பு காயம் 34 க்கு 1 செ.மீ அளவில் தைராய்டு என்னும் குறுத்தெலும்பு பகுதியில் கழுத்தை சுற்றி முழுவதும் காணப்பட்டது. சிராய்ப்பு காயமானது தடையின் நுனிபகுதியில் இருந்து 7 செ.மீ கீழாகவும், நெஞ்சக்குழியில் இருந்து 6.9 செ.மீ மேலாகவும் காணப்பட்டது. வலது பக்க கழுத்தில் வலது பக்க காது எலும்பில் இருந்து 8 செ.மீ கீழாகவும், இடது பக்க கழுத்தில் இடது பக்க

காது எலும்பில் இருந்து 6.8 செ.மீ கீழாகவும் காணப்பட்டது. மேலும் கூராய்வு செய்ததில் சிராய்ப்பு காயத்தின் அடிப்பகுதி காய்ந்து வெளிறியும் மற்றும் சொரசொரப்பாகவும் காணப்பட்டது. கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம் - 10.5 க்கு 7 செ.மீ அளவில் இடது பக்க கழுத்தில் காணப்பட்டது. குரல்வலை மற்றும் மூச்சுக்குழாய் காலியாகவும், அழுகிய நிலையிலும் காணப்பட்டது. நாவடி எலும்பு, பிற குரல்வலை எலும்புகள் மற்றும் ரத்தக்குழாய் நல்ல நிலையில் இருந்தது.

2. ஒழுங்கற்ற கருஞ்சிவப்பு நிறத்தினாலான சிராய்ப்பு காயங்கள் -

எ) 2க்கு 1 செ.மீ அளவில் இடது கால் முட்டியின் முன்பகுதியிலும் காணப்பட்டது.

பி) 2.3க்க 1.2 செ.மீ அளவில் வலது தோள் பட்டையின் மேல்பகுதியிலும்,

சி) 4 க்கு 0.9 செ.மீ அளவில் வலது புஜத்தில் கீழ் 3ம் பகுதியில் பின்புறத்திலும்,

டி) 2.2 க்கு 1.2 செ.மீ அளவில் வலது கால் முட்டியின் முன்பகுதியிலும்,

இ) 3 க்கு 1 செ.மீ அளவில் வலது முழங்காலின் மேல் 3ம் பகுதியில் முன் புறத்திலும்,

எப்) 3.2 க்கு 0.5 செ.மீ அளவில் இடது முழங்காலின் நடு 3ம் பகுதியின் முன் புறத்திலும்,

ஜி) 4க்கு 0.4 செ.மீ அளவில் இடது பக்க மார்பகத்தின் கீழ் 3ம் பகுதியின் வெளிபுறத்திலும்,

எச்) 6க்கு 3 செ.மீ அளவில் வலது பக்க முதுகின் கீழ் 3ம் பகுதியின் வெளிபுறத்திலும், நடுவே நல்ல தோள்களுடனும் காணப்பட்டது.

3) மண்டை ஓடு மேல் தோளை உரித்ததில் கருஞ்சிவப்பு நிறத்தினாலான படர்ந்த கன்றிய காயம் வலது பக்க வாட்டு மண்டையில் உள்ள தசையில் காணப்பட்டது. கருஞ்சிவப்பு நிறத்தினாலான கன்றிய காயம் 5க்கு 4 செ.மீ அளவில் மண்டை ஓடு மேல் தோள் ஆழம் வரை இடது பக்க மண்டை ஓடு முன்பகுதியிலும், கருஞ்சிவப்பு நிறத்தினாலான கன்றிய காயம் வலது பக்க முன் மண்டையிலும் காணப்பட்டது. மண்டை ஓட்டை அகற்றியதில் மெல்லிசான கருஞ்சிவப்பு நிறத்தினாலான ரத்தக்கசிவு டியூரா என்றும் ஜவ்வின் அடிப்பகுதியில் பெரு மூளை மற்றும் சிறு மூளை அனைத்து பகுதியிலும் காணப்பட்டது. தடிமனலான கருஞ்சிவப்பு நிறத்தினாலான ரத்தக் கசிவு மூளையை ஒட்டி பெரு மூளை மற்றும் சிறு மூளை அனைத்து பகுதியிலும் காணப்பட்டது. டியூரா என்று ஜவ்வு மற்றும் மண்டை ஓட்டின் அடிப்பகுதி நல்ல நிலையில் இருந்தது. இருதயம் சாதாரண அளவிலும், மென்மையாகவும், மற்றும் வலவல என்றும் காணப்பட்டது. கூராய்வு செய்ததில் அழுகிய நிலையில் இருந்தது. வால்வுகள், குரோனரி என்னும் ரத்தக்குழாய் மற்றும் மகாதமனி நல்ல நிலையில் இருந்தது.

நுரையீரல்கள் சாதாரண அளவிலும், மென்மையாகவும் மற்றும் வலவல என்றும் காணப்பட்டது. கூராய்வு செய்ததில் அழுகிய நிலையில் இருந்தது. இரைப்பையில் 150 மி.லி அளவிலான மஞ்சள் நிற திரவம் எந்தவித நாற்றமும் இல்லாமல் இருந்தது. இரைப்பை ஜவ்வு அழுகிய நிலையில் இருந்தது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சாதாரண அளவிலும், மென்மையாகவும் மற்றும் வலவல என்று காணப்பட்டது. கூராய்வு செய்ததில் அழுகிய நிலையில் இருந்தது. மார்பு எலும்பு, முதுகு தண்டு எலும்பு மற்றும் இடுப்பு எலும்பு நல்ல நிலையில் இருந்தது. உடல் உள்ளுறுப்புகள் சேகரித்து ரசாயண பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. பரிசோதனையின் முடிவில் இரைப்பை, குடல், கல்லீரல், சிறுநீரகங்கள் ஆகியவற்றில் எத்தில் ஆல்கஹால் கலத்து இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நபர் தலையில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் கழுத்து முழுவதும் இறுக்கப்பட்டதனால் ஏற்பட்ட ஒருங்கிணைந்த விளைவுகளால் இறந்து இருக்கக்கூடும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4, வேலூர் தடய அறிவியல் துறையில் வழங்கப்பட்ட நஞ்சியல் அறிக்கை அ.சா.ஆ. 5, பயாலஜி அறிக்கை அ.சா.ஆ. 6. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

கழுத்து இறுக்கப்பட்டுள்ளது. பொதுவாக கழுத்து இறுக்கப்பட்டுள்ளது என்பது தற்கொலையிலும் அவ்வாறு காணப்படும் என்று சொன்னால் சரிதான். கழுத்துக்கு அளிக்கப்பட்ட சுருக்கம் மட்டுமே இருந்து தலை காயம் இல்லாமல் போயிருந்தால் அவர் உயிருடன் இருக்க வாய்ப்பு உண்டா என்றால் வாய்பில்லை. தலைக்காயம் மட்டும் இருந்து கழுத்து இறுக்கம் இல்லாமல் இருந்தால் அவர் உயிருடன் இருக்க வாய்பில்லை. ஒருவர் தானே சுருக்கு போட்டு இறக்கும் போது அவருக்கு ஏற்படும் விளைவுகளை குறிப்பாக கூற இயலாது. ஒவ்வொரு நபருக்கும் வேறுபடும். ஒருவர் மற்ற நபரால் கழுத்து நெறித்து கொலை செய்யும் சூழலில் அந்த நபர் இறந்து விட்டால் அதன் விளைவுகளை விளக்க முடியுமா என்றால் உறுதியாக கூற முடியாது ஒவ்வொரு நபருக்கும் வேறுபடும். கொலை மற்றும் தற்கொலை என்ற சூழலில் கழுத்து இறுக்கப்பட்டு இறந்திருந்தால் அதனுடைய வித்தியாசத்தை எப்படி கண்டறிய முடியும் என்றால் கழுத்தில் உள்ள சிராய்ப்பு காயமானது கொலையான சூழ்நிலையில் கழுத்து முழுவதும் கிடைமட்டமாக காணப்படும். மேலும் கழுத்தில் கன்றிய காயங்கள் இருக்க வாய்புண்டு. தற்கொலை செய்து கொண்டால் கழுத்து முழுவதும் இருக்காது. கிடைமட்டமாக இருக்காது, சாய்ந்து காணப்படும், மேலும்

கழுத்தை சுற்றி கன்றிய காயங்கள் காணப்படாது. மற்றும் உடலில் வேறு மென்திசு காயங்கள் கொலையாக இருப்பின் இருக்க வாய்ப்புண்டு. தலையில் ஏற்பட்ட காயங்களும், கழுத்தில் இருக்கப்பட்ட சுருக்கம் ஒரே நேரத்தில் நடந்துள்ளது என்று அறுதியிட்டு சொல்ல முடியுமா என்றால் காயத்தின் நிறத்தைப் பொருத்து சொல்ல முடியும், இவ்வழக்கில் காயத்தின் நிறங்கள் மற்றும் கழுத்தில் உள்ள சிராய்ப்பு காயம் கருஞ்சிவப்பு நிறத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன். எவ்வளவு நேரத்திற்கு முன்பு மேற்சொன்ன இரண்டு காயங்களும் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. நேரத்தை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்பதால் அந்த இரண்டு காயங்களும் ஒரே நேரத்தில் ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல. தலையில் ஏற்பட்ட மூளையை ஒட்டியும், டியூரா என்ற ஜவ்வின் அடிப்பகுதியில் ஏற்பட்ட ரத்தக் கசிவால் மூளையே செயலிழக்கச் செய்து மூச்சுத் திணறை அதிகப்படுத்தும். கழுத்தில் ஏற்பட்ட அழுத்த சுருக்கத்திற்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தி உயிரை போக்கக்கூடியது. இறந்து போன நபர் தற்கொலை கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. எந்த போலீசார் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார் என்று நியாபகம் இல்லை. பிரேத பரிசோதனை செய்து கருத்துரை வழங்குவதற்கு எனக்கு திறமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சரியான ஒரு மருத்துவ கருத்துரையை வழங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- டாக்டர் கமலக்கண்ணன்.

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.